**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

--------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 87/2007 |
| Prosecution Witness | : | **அ.சா.2** |
| Name | : | **மருத்துவர் பால்** |
| Father's / Husband Name | : | **லூர்துசாமி** |
| Address | : | **பெரம்பலூர்** |
| Age | : | 60/2025 |

**தேதி : 12.02.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S.தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது பெரம்பலூரில் மெட்ரோ நர்ஸிங் ஹோம் என்ற பெயரில் மருத்துவமனை நடத்தி வருகிறேன். நான்இதற்கு பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தேன். 20.02.2000 அன்று நான் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது கருணாநிதி, வயது 33 த/பெ. துரைசாமி தீயணைப்பு துறையினரால் கொண்டுவரப்பட்டார். அவர் ராஜ்டூட் மோட்டார் சைக்கிள் பதிவு எண். Q4577 என்ற வாகனத்தை ஓட்டி சென்று 20.02.2000 காலை 10.30 மணிக்கு புளியமரத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாக கொண்டுவரப்பட்டார். அவரை நான் பரிசோதனை செய்தபோது அவருக்கு வலது தொடை எலும்பு முறிந்ததுபோல் காணப்பட்டது. 10x10 செ.மீ. அளவில் கிழிந்த காயம் இருந்தது. அவரது உதட்டில் கிழிந்த காயம் இருந்தது. அவரை நான் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்தேன். திருச்சி அரசு மருத்துவமனை சான்றின்படி அவருடைய வலது தொடை எலும்பு முறிந்துள்ளது. வயிற்றில் அறுவை சிகிச்சை

செய்யப்பட்டுள்ளது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று திருச்சி மருத்துவர் சான்று வழங்கியுள்ளார்.

அதே தேதி, அதே நேரத்தில், அதே சம்பவத்தில் தொடர்புடைய 32 வயதுடைய ராஜா என்பவரை பெரம்பலூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் மதியம் 3.30 மணிக்கு பிரேத பரிசோதனை செய்த கொண்டுவந்தார். பிரேதத்தின் அடையாளங்கள் நெற்றியின் நடுவில் தழும்பு இருந்தது. வலது தோள்பட்டையில் மச்சம் இருந்தது. 3.40 மணிக்கு பிரேத பரிசோதனை செய்ய ஆரம்பித்தேன். கை, கால்கள் விறைப்புத்தன்மையுடன் காணப்பட்டது. கண் மூடிய நிலையில் இருந்தது. இரண்டு காதிலும் இரத்தம் வந்தது. தலையில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக ஏற்பட்ட இரத்த கசிவின் காரணமாகவும், விலா எலும்புகள் நொறுங்கிய காரணத்தினாலும் நுரையீரலில் இரத்தம் கோர்த்துகொண்ட காரணத்தினாலும் இறந்திருக்கலாம் என்றும், பிரேத பரிசோதனை செய்வதற்கு 4 மணி நேரத்திற்கு முன்பு இறந்திருக்கலாம் என்றும் சான்று வழங்கினேன். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 மற்றும் 3வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கருணாநிதி என்பவரை எங்களுடைய மருத்துவமனையில் கொண்டுவந்து சேர்த்த தீயணைப்பு துறை காவலரின் பெயர், விபரம் ஆகியவற்றை விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் பொதுவாக தீயணைப்புத்துறை நபர் என்று குறிப்பிட்டுள்ளேன். தீயணைப்பு வாகனம் வந்ததால் நான் குறிப்பிட்டுள்ளேன். தீயணைப்பு வாகனத்தில் கருணாநிதி என்பவருடன் மற்றொரு நபர் கொண்டுவரப்பட்டாரா என்றால் நான் பார்க்கவில்லை. கருணாநிதி என்பவருக்கு சுயநினைவு வந்தபிறகுதான் சிகிச்சை அளிக்கப்பட்டது. விபத்து பதிவேட்டில் கருணாநிதி சுயநினைவுடன் இருந்தாரா அவருடைய இதயதுடிப்பு மற்றும் இரத்த ஓட்டம் குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

உதடு கிழிந்திருந்தால் பேச முடியாது என்றால் சரியல்ல, பேசமுடியும். அடிப்பட்ட நபர் பேசும் நிலையில் இருந்தார் என்பதை விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள விவரங்களை யார் சொன்னார்கள் என்று விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இறந்துபோன ராஜா என்பவரை குமார் என்ற அவருடைய சகோதரர் கொண்டுவந்ததாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be correct
Sd/-.

Judicial Magistrate No.1
Perambalur.